
# நான்கு ராஜ்ஜியங்களின் இரகசியம் - பகுதி - 2

**(The Mystery of The Four Kingdoms)**
**Part – II**
**(31 May – 2015)**




**போதகர் : A. சாமுவேல்**
**கல்வாரி கூடாரம், சென்னை - 600 087.**


உலகத்தின் ராஜ்யங்களும் கிறிஸ்துவின் ராஜ்யமும்
தானியேல் 2:31-45
பாபிலோனிய ராஜ்யம்
தலை - பொன்
நேபுகாத்நேச்சர்
( 605 BC - 539 BC )
சிங்கம்
மேதிய பெர்சிய ராஜ்யம்
மார்பு - வெள்ளி
தரியு ராஜா
( 539 BC - 331 BC )
கரடி
கிரேக்க ராஜ்யம்
வயிறு - வெண்கலம்
மகா அலெக்ஸாண்டர்
( 331BC - 146 BC )
சிவிங்கி
ரோம ராஜ்யம்
கால்கள் - இரும்பு
நீரோ மன்னன்
( 146 BC - 1453 AD )
பயங்கரமான மிருகம்
பிரிக்கப்பட்ட ராஜ்யம்
பாதங்கள் - இரும்பும் களிமண்ணும்
கத்தோலிக் பிராட்டஸ்டண்ட்
போப்புவின் ரோமாபுரி
( 1453 AD - CHRIST KINGDOM )
கையால்
பெயர்க்கப்படாத கல்
- நியாயத்தீர்ப்பு
கல் - பூமியெல்லாம் நிரப்பிற்று
கிறிஸ்துவின் ராஜ்யம்

# நான்கு ராஜ்ஜியங்களின் இரகசியம் - பகுதி - 2

அருமையானவர்களே! நான்கு இராஜ்யங்களைக் குறித்து முதல் பாகத்தில் நாம் பார்த்தோம். இப்பொழுது நான்காவது ராஜ்யத்தைக் குறித்து இரண்டாம் பாகத்தில் விளக்கமாகப் பார்க்கலாம்.

- ❖ தானியேல் கண்ட சிலையிலே நான்கு பாகங்கள் இருக்கிறது.
- ❖ தலை பொன்னாக இருந்தது. அது பாபிலோனிய ராஜ்யம். கி.மு. 605 முதல் 539 வரை, 66 வருஷங்கள் இருந்தது.
- ❖ அதன் பின்பு, மார்பும் புயங்களும் வெள்ளியாக இருந்தது. அது மேதிய பெர்சிய சாம்ராஜ்யம். கி.மு. 539 முதல் 332 வரை, 207 வருஷங்கள் இருந்தது.
- ❖ அதன் பின்பு, வயிறு வெண்கலமாய் இருந்தது. அது கிரேக்க ராஜ்யம். அலெக்சாண்டர் அதின் முக்கியமான ராஜாவாய் இருந்தான். கி.மு. 332 முதல் 63 வரை, 269 வருஷங்கள் இருந்தது.
- ❖ அதன் பின்பு, இரண்டு கால்களும் இரும்பாய் இருந்தது. அது ரோம ராஜ்யம். கி.மு. 63 முதல் கி.பி. 476 வரை, 539 வருஷங்கள் இருந்தது.
- ❖ அதன் பின்பு, பாதங்களும் பத்து விரல்களும் இரும்பும் களிமண்ணுமாய் இருந்தது. அந்தக் காலில் இருந்த இரும்பானது; பாதங்களுக்கும், பத்து விரல்களுக்கும் வருகிறது. அந்த இரும்புடன் களிமண்ணும் சேர்ந்திருந்தது. இரும்பும் களிமண்ணும் ஒட்டாது.

அது, இப்பொழுது இருக்கிற ராஜ்யத்தைக் குறிக்கிறது. அமெரிக்கா இரும்பாக இருக்கிறது. ரஷ்யா களிமண்ணாக இருக்கிறது. ஒன்றோடு ஒன்று ஒட்டாது. அதேபோல் உலகமெங்கிலும் சில ராஜ்யங்கள் பலமுள்ளதாகவும், சில ராஜ்யங்கள் பலவீனமாகவும் இருக்கிறது. ஒரு கட்சி பலமுள்ளதாய் இருந்து; இன்னொரு கட்சியை மேற்கொள்கிறது.

இவ்விதமான கடைசிகாலத்திலே உலகத்தின் ராஜ்யங்கள் இருக்கும்பொழுது, கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து அந்தச் சிலையினுடைய பாதத்திலே மோதினது. என்று தானியேல் 2:44 -ல் வாசிக்கிறோம்

தானியேல் 2:44 "அந்த ராஜாக்களின் நாட்களிலே, பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப்பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால்பெயர்க்கப்படாமல் மலையிலிருந்து பெயர்ந்து, உருண்டுவந்து, இரும்பையும் வெண்கலத்தையும் களிமண்ணையும் வெள்ளியையும் பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்".

இப்பொழுது அந்த நேரத்தை நாம் எதிர் நோக்கியிருக்கிறோம்.அது மோதும்பொழுது அந்தச் சிலையானது நொறுங்கி தவிடுபொடியாய் மாறி, காற்றிலே கலந்து விடும். அந்த ராஜ்யமே இருக்காது. ஆனால் அந்தக்கல்லோ பெரிய பர்வதமாக மாறி பூமியை நிரப்பிவிடும். இது தேவனுடைய ராஜ்யம் என்று நாம் அறிந்திருக்கிறோம். இந்த ராஜ்யம் வர நாம் காத்திருக்கிறோம். இந்தச் சொப்பனம் சத்தியம்; இந்தத் தரிசனம் சத்தியம்; நிச்சயமாக நிறைவேறும். இதுவரைக்கும் துல்லியமாக நிறைவேறியிருக்கிறது. இன்னும் கொஞ்சம் நிறைவேற வேண்டியதாக இருக்கிறது.

தானியேல் கண்ட தரிசனத்தைத்தான் யோவான் எழுதின வெளிப்படுத்தின விசேஷத்தில் நாம் பார்க்கிறோம். தானியேல் சுருக்கமாக எழுதியிருக்கிறான். யோவான் தெளிவாக அதைக் காண்கிறான். இந்தக் கடைசி காலத்தீர்க்கதரிசி சகோ. பிரன்ஹாம் நமக்கு அதைப்பற்றி விளக்கம் கொடுத்திருக்கிறார்.

மனுஷனுடைய ராஜ்யங்கள் நான்கு மட்டும் தான். ஏனென்றால் பாதத்திலே இரும்பு வந்து விடுகிறது. எனவே மொத்தம் நான்கு ராஜ்யங்கள் தான். இந்த நான்கு ராஜ்யங்கள் பற்றி நமக்குத் தெரியும்போது உலக சரித்திரத்தையும், பைபிள் சரித்திரத்தையும் நன்றாக அறியமுடியம்.

இந்த நான்காம் ராஜ்யமானது; மிகவும் பயங்கரமான ராஜ்யம். இப்பொழுது நான்காம் ராஜ்யத்திலே நாம் இருக்கிறோம். இந்த நாலாம் ராஜ்யம் உலகத்தின் முடிவுவரைக்கும் இருக்கும். இரும்பு காலிலிருந்து தொடங்கி பாதங்கள் வழியாகப் பத்து விரல்களுக்கும் போகிறது. எனவே நாம் பாதத்தின் நாட்களிலே இருக்கிறோம். நான்காம் ராஜ்யமானது மிகப் பொல்லாத ஒரு ராஜ்யம். இதைக் குறித்து நாம் தானியேல் 7ஆம் அதிகாரம் 7, 8, 15 முதல் 28 வசனங்களிலே காண்கிறோம்.

**7 :** அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது

**8 :** அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தினகொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷகண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவகளைப் பேசும் வாயும் இருந்தது.

**15 :** தானியேலாகிய நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன்; என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னைக் கலங்கப்பண்ணினது.

**16:** சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவனிடத்தில் நான் போய், இதன் பொருள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லும்படி அவனை வேண்டிக்கொண்டேன்; அவன் அந்தக் காரியங்களின் அர்த்தத்தை எனக்கு அறிவித்துச்சொன்னது என்னவென்றால்

17. அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்.

18. ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப்பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.

19. அப்பொழுது மற்றவைகளையெல்லாம் பார்க்கிலும் வேற்றுருவும் கெடியுமுள்ளதுமாய், இருப்புப் பற்களும், வெண்கல நகங்களுமுடையதாய் நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டதுமாயிருந்த நாலாம் மிருகத்தைக் குறித்தும்,

20. அதின் தலைமேலுள்ள பத்துக்கொம்புகளைக்குறித்தும் தனக்கு முன்பாக மூன்று கொம்புகள் விழுந்துபோக எழும்பினதுமாய், கண்களையும் பெருமையானவைகளைப் பேசும் வாயையுமுடையதுமாய், மற்றவைகளைப்பார்க்கிலும் பருமனாகத் தோன்றினதுமாயிருந்த அந்த வேறே கொம்பைக்குறித்தும், அவற்றின் பொருளை அறிய மனதாயிருந்தேன்.

21. நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும், நியாயவிசாரிப்பு உன்னதமான வருடைய பரிசுத்தவான்களுக்குக் கொடுக்கப்பட்டு, பரிசுத்தவான்கள் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் காலம் வருமட்டாகவும்,

22. இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன்.

23. அவன் சொன்னது: நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம்; அது எல்லா ராஜ்யங்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, பூமியை எல்லாம் பட்சித்து, அதை மிதித்து, அதை நொறுக்கிப்போடும்.

24. அந்தப் பத்துக்கொம்புகள் என்னவென்றால், அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்; அவர்களுக்குப்பின்பு வேறொருவன் எழும்புவான்; அவன் முந்தினவர்களைப்பார்க்கிலும் வேறாயிருந்து, மூன்று ராஜாக்களைத் தாழ்த்திப்போட்டு,

25. உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

26. ஆனாலும் நியாயசங்கம் உட்காரும்; அப்பொழுது முடிவுபரியந்தம் அவனைச் சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும் அவனுடைய ஆளுகையை நீக்கிப்போடுவார்கள்.

27. வானத்தின் கீழெங்குமுள்ள ராஜ்யங்களின் ராஜரீகமும் ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்குக் கொடுக்கப்படும்; அவருடைய ராஜ்யம் நித்திய ராஜ்யம்; சகல கர்த்தத்துவங்களும் அவரைச் சேவித்து, அவருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் என்றான்.

28. அவன் சொன்ன வார்த்தை இத்தோடே முடிந்தது. தானியேலாகிய நான் என் நினைவுகளால் மிகவும் கலங்கினேன்; என் முகம் வேறுபட்டது; இந்தக் காரியத்தை என் மனதிலே வைத்துக்கொண்டேன்.

- தானியேல், முதலில் சிங்கத்தைப் பார்க்கிறான். அதற்குக் கழுகின் செட்டைகள் இருந்தது. அவனுக்குப் பயம் ஒன்றும் இல்லை; சிறிதளவு வித்தியாசம் தான் இருந்தது.
- இரண்டாவது, மூன்று விலா எலும்புகளைக் கவ்வியிருந்த கரடியைப் பார்க்கும்போதும் அவனுக்கு எந்த மாற்றமுமில்லை. சிறிதளவு வித்தியாசம் தான்.
- மூன்றாவது, சிவிங்கியைப் பார்க்கிறான். அதற்கு ஒரு கொம்பு இருந்தது. அந்த ஒரு கொம்பு முறிக்கப்பட்டு நான்கு கொம்புகள் வந்தது. கழுகின் நான்கு செட்டைகளுடையதாய் அது இருந்தது. இதைப் பார்க்கும்போதும் அவனுக்கு ஒரு பயமுமில்லை.
- நான்காவது மிருகம்; கெடியும் பயங்கரமானதும் எல்லா மிருகத்தைக் காட்டிலும் பருமனாகவும் இருந்தது.

தானி 7: 7. அதற்குப்பின்பு, இராத்தரிசனங்களில் நாலாம் மிருகத்தைக் கண்டேன்; அது கெடியும் பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது; அதற்குப் பெரிய இருப்புப்பற்கள் இருந்தது; அது நொறுக்கிப் பட்சித்து, மீதியானதைத் தன் கால்களால் மிதித்துப்போட்டது; அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப்பார்க்கிலும் வேற்றுருவமாயிருந்தது, அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.

உலகத்தில் அவ்விதமான மிருகத்தை தானியேல் பார்த்ததில்லை. உலகத்தில் அவ்விதமான மிருகமும் இல்லை. தரிசனத்திலே அவ்விதமாய் பார்க்கிறான். அந்த மிருகத்திற்குப் பெரிய இரும்பு பற்கள் இருக்கிறது. நம் பற்கள் பொட்டாசியம், கால்சியத்தால் ஆனது.

எந்த மிருகத்திற்கும் இரும்பு பற்கள் இருக்காது. ஆனால் தரிசனத்தில் கண்ட மிருகம் அவ்விதமான பற்களைக்கொண்ட பயங்கரமான வேற்றுருவம் கொண்ட மிருகமாயிருக்கிறது. எல்லா மிருகத்திற்கும் இரண்டு கொம்புகள் இருக்கும். ஆனால் இதற்குப் பத்து கொம்புகள் இருந்தது. இந்தப் பத்து கொம்புகள் மத்தியிலே ஒரு சின்ன கொம்பு வந்தது.

தானியேல் 7: 8 அந்தக் கொம்புகளை நான் கவனித்திருக்கையில், இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்ன கொம்பு எழும்பிற்று; அதற்கு முன்பாக முந்தினகொம்புகளில் மூன்று பிடுங்கப்பட்டது; இதோ, அந்தக் கொம்பிலே மனுஷகண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவகளைப் பேசும் வாயும் இருந்தது.

இந்தச் சின்ன கொம்பு வந்த உடனே அந்தப் பத்து கொம்புகளிலிருந்து மூன்று கொம்புகள் வேரோடு பிடுங்கப்பட்டது. வேரோடு பிடுங்கப்பட்டதென்றால் திரும்ப அந்த மூன்று கொம்புகள் முளைக்காது.

அந்தச் சின்ன கொம்பில் கண் மற்றும் வாய் இருக்கிறது. எந்தக் கொம்புக்காவது கண் மற்றும் வாய் இருக்குமா? இருக்காது. பொதுவாக வாய் பெருமையானவைகளையே பேசும். நம்முடைய வாயும் அப்படிதான் பேசும். நாம் அதைக் கடிவாளம் போட்டு அடக்கவேண்டும். சிறிய நாவு பெரிய காட்டைக் கொளுத்தும் என்பார்கள். மிகப் பெருமையானவைகளையே பேசும் வாய் அந்தக் கொம்பில் இருந்தது என்று தானியேல் 7-ஆம் அதிகாரம் 8-ஆம் வசனத்தில் கடைசி பகுதியில் பார்க்கிறோம்.

அதன்பின்பு, அதே அதிகாரம் 15-ஆம் வசனத்திலிருந்து 28-ம் வசனம் வரைக்கும் வாசிக்கும்போது; முதல் மூன்று மிருகங்கள் தானியேலுக்கு எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் அந்த நாலாம் மிருகம் அவன் சிந்தையில் அதிக பாதிப்பை ஏற்படுத்தியது; அதற்கு விளக்கமும் தெரியவில்லை. அவனுக்கு அந்த மூன்று மிருகங்களைக் குறித்து விளக்கம் தெரிந்தது. ஆனால் இந்த நாலாம் மிருகத்தைக் குறித்து அவன் கலங்கிக் கொண்டிருக்கும்போது சமீபத்தில் நிற்கிற ஒருவனிடத்தில் கேட்டான்.

தானியேல் 7:16. சமீபத்தில் நிற்கிறவர்களில் ஒருவனிடத்தில் நான் போய், இதன் பொருள் எல்லாவற்றையும் எனக்குச் சொல்லும்படி அவனை வேண்டிக்கொண்டேன்;

தானியேல், தரிசனத்தில் காண்கின்ற அந்த மனுஷனிடத்தில்(தூதனிடத்தில்) இந்த நாலாம் மிருகத்தின் விளக்கத்தைக் கேட்டு அறிந்து கொண்டான். அதேபோல் நாம்

வெளிப்படுத்தின விசேஷத்தில் வாசிக்கும்போது அதே தூதனிடத்தில் யோவான் விளக்கத்தைக்கேட்கும்போது அந்தத் தூதன் விளக்கத்தை யோவானுக்குக் கொடுக்கிறான்.

வெளி 22:8. யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன். நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்.

இதோ யோவானாகிய நானே இந்தத் தரிசனங்களை எல்லாம் பார்த்தேன். இதெல்லாம் பார்க்கும்போது ஒருவன் அதற்கு விளக்கத்தைச் சொன்னான். அவனுடைய பாதத்திலே வணங்கும்படியாக விழுந்தபோது இவ்விதமாய் செய்யாதே. நானும் உன்னோடு கூட ஒரு சகோதரன்தான்: ஒரு ஊழியக்காரன்தான் : தேவனைத் தொழுது கொள். என்று சொல்வதை வெளி : 19 ஆம் அதிகாரம் 10ம் வசனத்தில் வாசிக்கிறோம்.

வெளி 19:10 அப்பொழுது அவனை வணங்கும்படி அவனுடைய பாதத்தில் விழுந்தேன். அவன் என்னை நோக்கி: இப்படிச் செய்யாதபடிக்குப் பார்; உன்னோடும் இயேசுவைக்குறித்துச் சாட்சியிட்ட சகோதரரோடுங்கூட நானும் ஒரு ஊழியக்காரன்; தேவனைத் தொழுதுகொள். இயேசுவைப்பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தின் ஆவியாயிருக்கிறது என்றான்.

இவ்வசனங்களிலிருந்து நாம் அந்தத்தூதன் பூமிக்குரிய செய்தியாளன் என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. அதே தூதன் தான் ஏழு பொன்குத்துவிளக்குகள், ஏழு நட்சத்திரங்கள், நான்கு முத்திரைகள், நான்கு ஜீவன்கள், நான்கு குதிரைகள் இவைகளைப் பற்றிய இரகசியங்களுக்கு விளக்கம் கொடுப்பதைப் பற்றி வாசிக்கிறோம். எனவே யோவானுக்குக் காண்பித்த அதே தூதனைத்தான் தானியேலும் பார்த்திருக்கிறான்.

தானியேல் மற்றும் யோவான் காலத்தில் அந்தத் தூதன் மாம்சத்தில் பிறக்கவேயில்லை. ஆனால் அவர்கள் தரிசனத்தில் பார்க்கிறார்கள். நாம் பிறப்பதற்கு முன்னதாகவே இயேசுகிறிஸ்து நம்மைப் பார்த்திருக்கிறார், நம்மை மகிமையிலேயும் அவர் கண்டிருக்கிறார். அதேபோல் தான் அந்தத்தூதனைத் தானியேலும், யோவானும் தரிசனத்தில் பார்த்திருக்கிறார்கள். நமக்கும் அந்தத்தூதன் தான் விளக்கத்தைக் கொடுத்திருக்கிறார். அந்தத்தூதன் யார்? ஏழாம் தூதன் **சகோதரன். வில்லியம் மரியன் பிரன்ஹாம் (BRO. WILLIAM MARRION BRANHAM)**.

வெளி 22:8 யோவானாகிய நானே இவைகளைக் கண்டும் கேட்டும் இருந்தேன். நான் கேட்டுக் கண்டபோது, இவைகளை எனக்குக் காண்பித்த தூதனை வணங்கும்படி அவன் பாதத்தில் விழுந்தேன்.

ஏனென்றால், இந்தத் தூதனைத்தான் இந்த இரகசியத்தை வெளிப்படுத்தும்படியாக கர்த்தர் நியமித்திருக்கிறார்.

இதை அவராகத் தெரிந்து கொள்ளவில்லை, அவருடைய முயற்சியில் வரவில்லை. கர்த்தரே அவரைத் தெரிந்து கொண்டிருக்கிறார். அந்தத்தூதன் வெளிப்படுத்தின விசேஷத்தினுடைய அடையாளங்களுக்குப் பின்னால் இருக்கிற எல்லா இரகசியத்தையும் நான்கு மிருகங்களின் இரகசியத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார். ஆனால் ஸ்தாபன மக்கள்; ஸ்தாபன போதகர்கள்; வேதாகம கல்லூரியில் (Theology) படித்தவர்கள். சற்று கற்பனை

செய்து கூறலாம். ஆனால் அவர்களால் தெளிவான வெளிப்பாட்டைக் (Clear Revelation) கொடுக்க முடியாது. இந்தத் தெளிவான வெளிப்பாட்டை ஏழாம் தூதனுக்குத்தான் இயேசு கிறிஸ்து ஒப்படைத்திருக்கிறார்.

சீக்கிரத்தில் சம்பவிக்க வேண்டியவைகளைத் தம்முடைய ஊழியக்காரருக்குக் காண்பிக்கும் பொருட்டு தேவன் இயேசு கிறிஸ்துவுக்கு ஒப்புவித்ததும், இவர் தம்முடைய தூதனை அனுப்பி யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷம் என்று பார்க்கிறோம்.

வெளி 22:16 சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன். நான் தாவீதின் வேரும் சந்ததியும், பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரமுமாயிருக்கிறேன் என்றார்.

இந்த யோவான் கடைசிகால மணவாட்டிக்கு அடையாளமாக இருக்கிறான். இப்பொழுது இந்தக் கடைசிகால மணவாட்டியாகிய நாம்; ஆதியாகமம் முதல் வெளிபடுத்தின விசேஷம் வரை மறைந்திருக்கிற இரகசியங்களை ஒரு தீர்க்கதரிசி மூலமாக (சகோ. வில்லியம் மரியன் பிரன்ஹாம்) அறிந்திருக்கிறோம்.

இப்பொழுது நாம் முதலில் அஞ்ஞான ரோமாபுரியைக் (Pagan Rome) குறித்துப் பார்ப்போம். பின்பு போப்புவின் ரோமாபுரியைக் (Papal Rome) குறித்தும், இந்த நாலாம் மிருகத்தின் பிடியிலிருந்து எப்படி தப்பித்துக் கொள்ளமுடியும் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

தானியேலுக்கு வெளிப்படுத்தின தூதன் தான் யோவானுக்கும் வெளிப்படுத்தினான் என்று நாம் பார்க்கிறோம். அந்த வாய் எப்படி பெருமையானவைகளைப் பேசியது. பத்துக் கொம்புகள்; இந்தப் பத்துக்கொம்புகளிலிருந்து எப்படி மூன்று கொம்புகள் பிடுங்கப்பட்டது. கடைசியாக அவன் எப்படி உத்திரவகாலத்தைக் கொண்டு வருவான் என்பதை தானியேல் 7:25 -ல் காண்கிறோம்.

தானியேல் 7: 25 உன்னதமானவருக்கு விரோதமாக வார்த்தைகளைப் பேசி, உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்; அவர்கள் ஒருகாலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக்கொடுக்கப்படுவார்கள்.

ஒரு காலம் என்பது ஒரு வருடம், காலங்கள் என்பது இரண்டு வருஷம், அரை காலம் என்பது ஆறு மாதம் (1+2+½ = 3½ வருஷம்) இது தான் உபத்திரவக்காலம்.

இந்த உபத்திரகாலத்திலே மூன்றரை வருஷம் பத்து ராஜாக்களும் தங்களுடைய ராஜ்யங்களை அந்த மிருகத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள். அந்த மிருகமானது உலகத்தை மூன்றரை வருஷம் ஆளுகைச் செய்யும். அதுதான் அந்திக் கிறிஸ்துவின் காலம். சூரியன் கருப்புக் கம்பளியைப் போல மாறினது. சந்திரன் இரத்தம் போல மாறினது. இது உபத்திரவக் காலமாக இருக்கிறது. வேதாகமத்தில் இந்த உபத்திரவக் காலத்தை (மூன்றரை வருஷத்தை) ஆயிரத்து இருநூற்று அறுபது நாட்களாகவும், 42 மாதங்கள் என்றும், ஒரு காலமும், காலங்களும, அரைகாலமும் என்று திட்டவட்டமாகப் போடப்பட்டிருக்கிறது.

அந்த மூன்றரை வருஷம் மிருகத்தின் முத்திரையைக் கொண்டு வரும் பொழுது, அந்தக் காலம் மிகக் கொடியக்காலமாய் இருக்குமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார்.

**மத்தேயு 24:21** ஏனெனில், உலகமுண்டானதுமுதல் இதுவரைக்கும் சம்பவித்திராததும், இனிமேலும் சம்பவியாததுமான மிகுந்த உபத்திரவம் அப்பொழுது உண்டாயிருக்கும்.

இந்த வசனத்திலே, உலகம் உண்டான முதற்கொண்டு இவ்விதமான ஒரு கொடிய காலம் வந்ததேயில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. இந்த உபத்திரக்காலம் சீக்கிரமாய் வரப்போகிறது. நாலாம் மிருகம் இப்பொழுதும் இருக்கிறது. சாத்தான் அந்த நாலாம் மிருகத்தை அபிஷேகிக்கும் போது உலகத்தை அவன் ஆளுகைச் செய்வான். (One World Government) இந்த நியு வோர்ல்டு ஆர்டர் (New World Order) வரும்பொழுது சாத்தான் உலகத்தின் மேல் தன் பிடியை (Grip) வைக்கும்போது அந்தக்காலம் மிகப்பயங்கரமாய் இருக்கும்

உலகமுண்டாவதற்கு முதற்கொண்டு இதுவரை சம்பவியாததுமான பெரிய கொடிய காலம் ஏற்படுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே நான்காம் மிருகமானது முழு வல்லமையோடு: முழு உலகத்தையும் ஆளுகைச் செய்யும். அந்த நாலாம் மிருகம் அஞ்ஞான ரோமாபுரியாக (Pagan Rome) மாறி, போப்புவின் ரோமாபுரியாக (Papal Rome) வளர்ந்து, கடைசியிலே பாழாக்கும் அருவருப்பாக மாறி, கடைசியாக முடிவு ஏற்படும்.

பின்பு தேவனுடைய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படும்போது இன்னொரு ராஜ்யம் அதை மேற்கொள்ள முடியாது. முதல் பாகத்திலே கடைசியாக அதைத்தான் சொல்லியிருக்கிறேன். இந்த ராஜ்யம்; தேவனுடைய ராஜ்யம்; உன்னதமான பரிசுத்தவான்கள் ஆளுகை செய்வார்கள். அந்த நாலாம் ராஜ்யமானது ஒழிந்து பரிசுத்தவான்கள் ஆளுகைச் செய்யும்போது அதை மேற்கொள்வதற்கு இன்னொரு ராஜ்யமில்லை. (We got the Power in Name of JESUS we cannot be defeated) அந்த ராஜ்யம்; நித்திய ராஜ்யம். கிரேக்க ராஜ்யத்தை ரோம ராஜ்யம் மேற்கொண்டது. பாபிலோனிய ராஜ்யத்தை மேதிய பெர்சிய சாம்ராஜ்யம் மேற்கொண்டது. ஒரு கட்சி போய் இன்னொரு கட்சி வருகிறது.

இந்திய தேசத்தைப் பல கட்சிகள் ஆளுகை செய்கிறது. இதற்குமுன் ஆங்கிலேயர்கள், மொகலாயர்கள் இந்தியாவை ஆண்டார்கள். உலகத்திலே பல பகுதிகளைப் பார்க்கும்போது எந்த ராஜாக்கள் ஆண்டார்கள், என்று பார்க்கிறோம். ஒரு ராஜ்யம் ஒழிந்து இன்னொரு ராஜ்யம் வருகிறது. ஆனால் கடைசியாக தேவனுடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்பொழுது அந்த ராஜ்யம் எல்லா ராஜ்யங்களையும் அழித்துப் போடும்.

இதோ அந்த ராஜ்யத்தை அழிப்பதற்கு எந்த ராஜ்யங்களும் இல்லை. நாம் அந்த ராஜ்யத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கிறோம். ஆமென். அந்த ராஜ்யம் இப்பொழுது நமது இருதயத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஸ்தாபிக்கப்படவில்லையென்றால் சபைக்கு வந்தும் பயன்படாமல் போய்விடும்.

**லூக்கா 17:21.** இதோ, இங்கே என்றும், அதோ, அங்கே என்றும் சொல்லப்படுகிறதற்கும் ஏதுவிராது; இதோ, தேவனுடைய ராஜ்யம் உங்களுக்குள் இருக்கிறதே என்றார்.

இந்த ராஜ்யம் நமக்குள் இருக்கிறது. நீங்கள் வாசிக்கும் இந்த வார்த்தைதான் தேவனுடைய ராஜ்யமாய் இருக்கிறது, அதை நான்காம் ராஜ்யம் ஜெயிக்க முடியாது.

தானியேல் 7:18. ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப்பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.

உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப் பெற்று இந்த உலகத்தை ஆயிரம் வருஷம் ஆளுகை செய்வது மட்டுமல்லாமல் புதிய எருசலேம், நித்தியநகரத்தில் அவர்கள் வாசம் பண்ணும்போது அந்த ராஜ்யமானது என்றென்றைக்குமுள்ள சதாகாலத்தின் ராஜ்யம். இந்த ராஜ்யம் வேறு ஜாதியாருக்குக் கொடுக்கப்படுவதில்லை. நாம் அந்த ராஜ்யத்தை எதிர்நோக்கியிருக்கிறோம். இப்பொழுது நம்மை நாமே சிந்தித்துப் பார்ப்போம். அந்த ராஜ்யத்துக்கு உண்மையிலே ஆயத்தமாய் இருக்கிறோமா என்பது தெரியும்.

ஆதியிலே கொண்ட அன்பை விட்டுவிட்டோமா? முன்னால் இருந்த வளர்ச்சி (Spiritual Growth) இப்பொழுது இல்லையா? சற்று சிந்திப்போம். நீ ஆதியிலே கொண்ட அன்பை விட்டாய் என்று உன்பேரில் எனக்குக் குறை இருக்கிறது, என்று இயேசுகிறிஸ்து எபேசு சபையைப் பார்த்துச் சொல்கிறார். லவோதிக்கேயா சபையைப்பார்த்து நீ குளிரும் இல்லாமல் அனலுமில்லாமல் வெதுவெதுப்பாய் இருக்கிறாய், உன்னை நான் வாந்திபண்ணிப்போடுவேன்; வருகையிலே நீ கைவிடப்படுவாய் என்று சொல்லுகிறார்.

இவ்விதமான நிலைமையை அடைந்திருக்கிறோமா?

வெளி 22: 14. ஜீவவிருட்சத்தின்மேல் அதிகாரமுள்ளவர்களாவதற்கும், வாசல்கள் வழியாய் நகரத்திற்குள் பிரவேசிப்பதற்கும் அவருடைய கற்பனைகளின்படி செய்கிறவர்கள் பாக்கியவான்கள்.

எந்தக் கற்பனை நாம் கைக்கொள்ளவில்லை. யோசித்துப்பார்த்து அதையெல்லாம் கடைப்பிடிக்கும்போது நாம் அந்த ராஜ்யத்தை அடைய முடியும். நாம் முன்பைவிட அதிகமாக நேசிக்க வேண்டும். அவரைக் காண வாஞ்சிக்க வேண்டும். அப்படியில்லாமல் உலகம், பணம், வேலை என்று அதற்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமா?

நாம் உலகத்தில் வாழும் வரை இதெல்லாம் தேவைதான். ஆனால், நாம் எதற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம்? அனலுமில்லாமல் குளிருமில்லாமல் வெதுவெதுப்பாய் இருக்கிறோமா? இயேசு கிறிஸ்து நம்மைக் கைவிடுவேன் என்று சொல்லுகிறார். கர்த்தர் கட்டளையிட்டிருக்கிற எல்லா கற்பனைகளையும் கைக்கொண்டு பரிசுத்தாவியானவர் பேசும்போது அவருடைய வார்த்தைக்குக் கீழ்படிந்தால் நாம் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ள முடியும்.

நாம் ஏதோ கடமைக்காக சபைக்குச் சென்று வருவது அல்ல. இயேசுவை நேசிக்க வேண்டும். அவருடைய வார்த்தைக்கு ஒப்புக்கொடுக்கவேண்டும். உத்தமமான கிறிஸ்தவர்களாக இருக்கவேண்டும். நாம் ஆவிக்குரியவர்களாக வளர்ச்சி அடைந்தால் தான் அந்த ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ள முடியும். அல்லது மேலே குறிப்பிட்டவற்றிற்கு எதிர்மறையாகப் போனால் தேவனுடைய ராஜ்யம் நம்மைவிட்டு விலகுகிறது என்பதை அறியவேண்டும்.

மணவாட்டிக்குள் அந்த ராஜ்யம் இருந்தால் அது உலகத்தை ஜெயிக்கும். உன்னதமான பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப் பெற்று சதாகாலங்களிலும் ஆளுகைச் செய்வார்கள்.

**தானியேல் 7:18 ஆனாலும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தைப்பெற்று, என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்வார்கள் என்றான்.**

இப்பொழுது, நாம் வார்த்தையைக் கவனிப்போம். அந்த நான்கு ராஜ்யங்களைக் குறித்தும், அதன் பின்னால் மூன்று ஆவிகள் எப்படி செயல்படுகிறது என்பதைக் குறித்தும் காண்போம். அந்த மூன்று ஆவிகள் என்பது அரசியல் ஆவி, மத சம்பந்தமான ஆவி, பிசாசின் ஆவி. இவையே அந்த நாலாம் ராஜ்யத்துக்குப் பின்னால் செயல்பட்டுக்கொண்டு இருக்கிறது. எனவே தான் நாம் அரசியலில் ஈடுபடக்கூடாது. நமக்குள் பரிசுத்தாவி இருந்தால் அரசியலில் ஈடுபடமாட்டோம். தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து நாம் மற்றவர்களுக்குச் சொல்லி அவருடைய ராஜ்யத்துக்கு வரவேற்போம். நாம் அவருடைய ராஜ்யத்துக்காகப் பாடுபடுவோம்.

இந்த அரசியல்ஆவி, மதஆவி, பிசாசின்ஆவி, மேதியபெர்சிய, கிரேக்க ராஜ்யங்களுக்குப் பின்னால் இருக்கிறது. இம்மூன்று ஆவிகளும் நாலாம் ராஜ்யத்தில் சேரும்போது அது மிகவல்லமை உடையதாக மாறுகிறது. அது மிகப்பொல்லாத மிருகம். இன்று நாம் காண்கின்ற ஸ்தாபனங்கள் சி.எஸ்.ஐ., பெந்தகோஸ்தே மற்றும் ரோமன் கத்தோலிக்க மார்க்கம் அனைத்துக்கும் பின்னால் ஒரு ஆவி இருக்கிறது. இந்த ஸ்தாபனங்களுடன் ஐக்கியப்படும் போது பொல்லாத ஆவிகளோடு தொடர்பு கொள்கிறோம்.

இப்பொழுது நாம் அதெல்லாவற்றையும் விலக்கியிருக்கிறோம். ஒவ்வொரு மார்க்கத்திற்கும் ஒரு ஆவி இருக்கிறது. ஒவ்வொரு இயக்கங்கள் கம்யூனிசம், சோசியலிசம், யுமனிசம் (Communism, Socialism, Humanism) பின்னால் ஒரு ஆவி இருக்கிறது. இதெல்லாமே பிசாசின் ஆவியாய் இருக்கிறது. நாம் எதிலாகிலும் போய் சிக்கிக் கொண்டால் அந்த ஆவியோடு தொடர்பு கொள்கிறோம். நாம் வார்த்தையிலும், ஜெபத்திலும் தரித்திருக்கும்போது பரிசுத்தாவியுடன் ஐக்கியம் கிடைக்கிறது.

இதை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் பரிசுத்தாவியோடு ஐக்கியம் கொண்டிருக்கிறீர்கள். எனவே, நாம் எந்த ஆவிக்கும் இடம் கொடுக்கக்கூடாது. நாம் கிறிஸ்துவைச் சேர்ந்தவர்கள், வார்த்தையைச் சேர்ந்தவர்கள். நாம் கர்த்தருடைய வார்த்தையை மேன்மைப்படுத்துகிறோம். நம்மை மேன்மைப்படுத்துவதற்கு ஒன்றுமேயில்லை. கர்த்தர் நல்லவர் அவருடைய வார்த்தை உண்மை.

நாலாம் ராஜ்யத்தில் மூன்று வல்லமைகளும் சேரும்போது அதிக வல்லமை கொண்டதாய் இருக்கிறது. அதேபோல் நாம் பார்க்கும்போது வெள்ளைக்குதிரை, சிவப்புக்குதிரை, கருப்புக்குதிரை அதன்பின்பு மங்கின நிறமுடைய குதிரை இவை அனைத்திலும் பிரயாணம் பண்ணுவது ஒரே ஆவிதான்; அது சாத்தானின் ஆவி, அவன் குதிரையை மட்டும் மாற்றிக்கொள்கிறான்.

வெள்ளைக்குதிரை (Religious Spirit), சிவப்புக்குதிரை (Political Spirit), கருப்புக்குதிரை (Demonic Spirit) இவை மூன்றும் ஒன்றாய் சேர்ந்து மங்கின நிறமுள்ள குதிரையாய் மாறுகிறது. (நாலாம் மிருகம்) இதற்கு அதிக வல்லமை வந்துவிடுகிறது.

வெளி 6 : 7, 8

7 அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன்.

8. நான் பார்த்தபோது, இதோ, மங்கினநிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்டமிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும் படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது.

இந்த மூன்று ஆவிகள் ஒன்று சேரும்போது அதிக வல்லமையோடு நாலாம் ராஜ்யம் வருகிறது. இந்த நாலாம் ராஜ்யம் அதிக காலம் நீடிக்கிறது. சீசர்கள் ஆண்ட ரோமாபுரி கி.மு. 63-ல் தொடங்கி கி.பி. 476-ல் முடிந்தது. 539 வருடம் நீடித்திருந்தது. ஆனால் இந்த ராஜ்யம் நான்கு வல்லமைகளும் சேரும்போது போப்புவின் ரோமாபுரியாய் மாறினது. இந்த ராஜ்யம் கி.பி. 500-லிருந்து தொடங்கி இன்று வரைக்கும் இருக்கிறது. இனிமேலும் அது தொடர்ந்து இருக்கும்.

அது அந்திகிறிஸ்துவாக மாறி அர்மகெதோன் யுத்தம் வரைக்கும் நீடிக்குமென்பதால் அது அதிககாலம் ஆளுகைச் செய்கிறது. மற்றதெல்லாம் கொஞ்சகாலம் தான் ஆட்சி செய்கிறது. அது அஞ்ஞான ரோமாபுரியாக ஆரம்பித்து, போப்புவின் ரோமாபுரியாக மாறி அந்திகிறிஸ்துவாக உபத்திரவக் காலத்தில் முடியும். அந்த மிருகம் எவ்வளவு பலத்ததாய் இருக்கிறது. எல்லா மிருகங்களுமே கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாக அந்தந்த காலத்தில் இருந்தது.

பாபிலோனிய ராஜ்யம் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் இருந்தது. சாலமோன் கட்டின தேவாலயத்தை நேபுகாத்நேச்சார் இடித்துப் போட்டான். தேவாலயத்திலிருந்த பொற்பாத்திரத்திலே பெல்ஷாத்சார் திராட்ச ரசத்தைக் குடித்தான், கையுறுப்பு வந்து மெனே, மேனே, தெக்கேல், உப்பார்சின் என்று எழுதினது. அந்த ராஜ்யத்துக்கு முடிவு வந்தது. அதன்பின்பு மேதியபெர்சியர்கள் வந்து ஆலயத்தைக் கட்டாதபடி நிறுத்திவிட்டார்கள். சில ராஜாக்கள் அவர்களின் பின்னால் இருந்து உதவியும் செய்தார்கள். அதிலிருந்து கிரேக்க ராஜ்யம் வந்தது. கி.மு. 167-ல் ஆண்டியோகிஸ் IV எப்பாபினிஸ் (Antiochus IV Epiphanes) என்பவன் தேவனுடைய ஆலயத்தில் வந்து பலிபீடத்திலே பன்றியைப் பலிசெலுத்தி, தேவாலயத்தைத் தீட்டுப்படுத்தி விட்டான். எல்லா ராஜ்யங்களும் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உபத்திரவத்தைத் தான் கொடுத்தது.

அஞ்ஞான ரோமாபுரியாகிய சீசர்களின் ரோமாபுரி அப்போஸ்தலர்களைக் கொலை செய்தது. நீரோ மன்னன் அப்போஸ்தலர்களைக் கொலை செய்தான். இவர்களைப் பார்க்கிலும் போப்புவின் ரோமாபுரி எல்லாவற்றையும் விட அதிகமாகக் கொலை செய்தது. மிகவும் பொல்லாத மிருகம், இரும்பு பற்களைக் கொண்ட இந்த மிருகம் ஈவு இரக்கம் பாராமல் கடித்து காலால் மிதித்துப்போடும். அது ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லோரையுமே அடியோடு அழித்துவிடும். ஹிட்லர், ஸ்டாலின் யூதர்களைக் கொன்றார்கள்.

சீனாவில், கம்போடியாவில் அதிக ஜனங்கள் அழிக்கப்பட்டார்கள். சதாம் உசேன் அதிக ஜனங்களை அழித்திருக்கிறான். (Genocide) இதெல்லாம் நாம் வாழும் காலத்தில் தான் நடந்து கொண்டிருக்கிறது. தங்களுடைய பாதையிலே குறுக்கே யாராவது வந்தாலும், தங்களின் கொள்கைகளை ஏற்றுக்கொள்ளாதவர்களையும் அழித்துவிடும், பொல்லாத ஆவிகள் அப்படிதான் செய்யும்.

எனவே, கடைசியான மிருகம் எல்லாவற்றையும் விட மிக அதிகமான பொல்லாப்பைச் செய்யும். அஞ்ஞான ரோமாபுரியைக் காட்டிலும் போப்புவின் ரோமாபுரி அதிக கொலை செய்தது. இனிமேலும் இன்னும் அதிகமாகக் கொலை செய்யப்போகிறது. எனவேதான் பரிசுத்தவான்கள்மேல் யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படி அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது என்று தானியேல் 7-ஆம் அதிகாரம் 22-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கிறது

தானியேல் 7:22 இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன்.

இவ்வளவு பயங்கரமான மிருகத்தின் பிடியிலிருந்து நாம் தப்பித்துக்கொள்ள கர்த்தர் நமக்கு வழியை உண்டுபண்ணியிருக்கிறார். அதற்குத்தான் அந்த விளக்கம் சொன்ன அந்த தூதனின் சத்தத்தைக் கேட்க வேண்டும்.

கி.மு. 63-ல் ரோம ராஜ்யம் (Iron) வந்தது. கி.மு. 60-ம் வருஷத்தில் பாம்ஃபே (Pompeii) என்ற பட்டணம் இருந்தது. இது உலகத்திலே அதிக நாகரீகம் கொண்ட பட்டணம். இத்தாலி பக்கத்தில் இருந்தது. சோதோம் கொமாராவைவிட அதிக பாவம் நிறைந்த பட்டணம். அங்கே எரிமலை வெடித்து அந்தப்பட்டணம் அழிந்தே போனது. இந்த பட்டணத்தை ஜூலியஸ் சீசர் கி.மு. 60-ஆம் வருஷம் கைப்பற்றினான். அதன் பின்பு மார்ச் 15-ம் தேதி கி.மு. 44-ல் ஜூலியஸ் சீசர், புரூட்டஸ், காசியஸ் என்ற இரண்டு ரோம தளபதிகளால் கொல்லப்பட்டார். இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு 27 வருஷத்துக்கு முன்பாக அகஸ்து ராயன் (Augustus Caesar) ரோம சக்கரவர்த்தியாக மாறினார்.

இயேசுகிறிஸ்து கி.மு. 1-ம் வருஷம் அல்லது கி.பி. 1-ம் வருஷத்தில் பெத்லேகேமில் பிறந்தார். கி.பி 29-ம் வருஷத்தில் ஞானஸ்நானம் பெற்றார். கி.பி. 33-ம் வருஷத்திலே சிலுவையிலே அறையப்பட்டார். கி.பி. 44-ம் வருஷத்தில் கர்த்தர் பவுலைச் சந்தித்தார். கி.பி. 67 ஆம் வருஷத்தில் நீரோ மன்னன் அப்போஸ்தலர்களைக் கொலை செய்தான். ரோமாபுரியை நீரோ மன்னன் தீக்கொளுத்திவிட்டு அந்தப் பழியைக் கிறிஸ்தவர்கள் மேல் போட்டான் என்று சரித்திரம் கூறுகிறது.

அதன் பின்பு, செரூபாபேல் (யூதர்கள்) கட்டின தேவாலயமானது கி.பி. 70-ல் தீத்துவால் இடிக்கப்பட்டது. அவன் ஆலயத்தை இடித்ததுமல்லாமல் இஸ்ரவேல் நாட்டைப் பாழடையும்படிச் செய்தான். ஜனங்களைக் கொன்றுவிட்டான். இரத்தம் ஆறாக ஓடியது.

மாற்கு 13:14 மேலும் பாழாக்குகிற அருவருப்பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே; வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன்; அது நிற்கத் தகாத இடத்திலே நீங்கள் அதை நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக்கடவர்கள்.

இயேசுகிறிஸ்து பாழாக்கும் அருவருப்பு வரும்போது நீங்கள் ஓடிப்போங்கள் என்று கூறியிருக்கிறார். ஆண்டியோகிஸ் எப்பாபினிஸ் (Antiochus IV Epiphanes) தேவாலயத்தில் பன்றியைக் கொண்டு வந்து பலிசெலுத்திவிட்டான். இதுவும் பாழாக்கும் அருவருப்புதான். இனி வருங்காலத்தில் அந்திகிறிஸ்து (Anti-Christ) தேவனுடைய ஆலயத்திலே தேவன் போல் உட்காரும்பொழுது,

2 தெச2:4 அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்து கிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

இந்த வசனம் நிறைவேறும்பொழுது இதுவும் பாழாக்கும் அருவருப்பு தான்; என்று நாம் அறிகிறோம்.

எனவே, ஒரு ஆவி இருவகையான அர்த்தத்தில் உள்ளது. அது மீண்டும் மீண்டும் நிறைவேறுகிறது. இன்று தேவனுடைய வார்த்தையை எத்தனை முறை விசுவாசித்தாலும் எத்தனை பேர் விசுவாசித்தாலும்: அவர்களுக்கெல்லாம் அது நிறைவேறும். இது தான் பாடபுத்தகத்துக்கும் பைபிளுக்கும் உள்ள வித்தியாசம். பாட புத்தகம் நிறைவேறாது. ஆனால் பைபிளில் உள்ள வார்த்தை எத்தனை முறை வேண்டுமானாலும் நிறைவேறும்.

பாழாக்கும் அருவருப்பு கிட்டத்தட்ட நான்கு முறை நிறைவேறுகிறது. கி.பி. 70 ல் தீத்து 5-வது ரோம சக்கரவர்த்தியாக வந்து தேவாலயத்தை இடித்துப் போட்டு எருசலேமைத் தரைமட்டமாக்கி யூதர்களைக் கொன்று இரத்தம் ஆறாக ஓடினது. ஜனங்கள் பூமியெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். தேவாலயம் இடிக்கப்பட்ட இடத்தில் அடையாளமாக ஒரு நினைவு வளைவு (Arch of Titus) கட்டிவைத்திருக்கிறான். இப்பொழுதும் அது ஒரு சாட்சியாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் கல்லறையும் இந்த நினைவு வளைவும் இருக்கிறது. இயேசுகிறிஸ்து உலகத்திலே வந்துமரித்து அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்பதற்குத் திறந்துள்ள கல்லறை நிரூபிக்கிறது. மேலும் அந்த அஞ்ஞான ரோமாபுரி கி.பி. 476 -ஆம் ஆண்டு விழுந்தது.

வெளிப்படுத்தல் 17: 5-11

5. மேலும், **இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்** என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.

6. அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்.

7. அப்பொழுது, தூதனானவன் என்னை நோக்கி: ஏன் ஆச்சரியப்படுகிறாய்? இந்த ஸ்திரீயினுடைய இரகசியத்தையும், ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையு முடையதாய் இவளைச் சுமக்கிற மிருகத்தினுடைய இரகசியத்தையும் உனக்குச் சொல்லுகிறேன்.

8. நீ, கண்ட மிருகம் முன்னே இருந்தது, இப்பொழுது இல்லை; அது பாதாளத்திலிருந்து ஏறிவந்து, நாசமடையப்போகிறது. உலகத்தோற்ற முதல் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள், இருந்ததும், இராமற்போனதும், இனி இருப்பதுமாயிருக்கிற மிருகத்தைப்பார்த்து ஆச்சரியப்படுவார்கள்.

**9.** ஞானமுள்ள மனம் இதிலே விளங்கும். அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரீ உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம்.

**10.** அவர்கள் ஏழு ராஜாக்களாம்; இவர்களில் ஐந்துபேர் விழுந்தார்கள், ஒருவன் இருக்கிறான், மற்றவன் இன்னும் வரவில்லை; வரும்போது அவன் கொஞ்சக்காலம் தரித்திருக்கவேண்டும்.

**11.** இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப்போகிறவனுமாயிருக்கிறான்.

ரோம்லஸ், ரீனஸ் என்ற இரண்டு பேர் அந்த மலைகளை இடித்து ஏழு மலைகள் மேல் ரோமாபுரி கட்டப்பட்டுள்ளது. எனவே, அந்த ஏழு தலைகளும் அந்த ஸ்திரி உட்கார்ந்திருக்கிற ஏழு மலைகளாம். இந்த ஸ்திரி சபைக்கு அடையாளமாய் இருக்கிறாள். இந்த ஏழு ராஜாக்கள் யாரென்றால் முதலாவது ஜூலியஸ்சீசர், இரண்டாவது அகஸ்தஸ் ஆக்டேவியன்சீசர், மூன்றாவது கிளாடியஸ்சீசர், நான்காவது வெஸ்பாசியன். ஐந்தாவது தீத்து, ஆறாவது நீரோ, ஏழாவது டொமிட்டன். இதில் ஐந்து பேர் விழுந்தார்கள். (மரித்தார்கள்) இப்பொழுது நீரோ மன்னன் இருக்கிறான். இன்னொருவன் வரவேண்டும் அவன் தான் டொமிட்டன். இவ்விதமாய் ஏழு ராஜாக்கள் வந்தார்கள், இது நடந்த சரித்திரமாய் இருக்கிறது. இதைப்பற்றி சரித்திர புத்தகத்தில் இருக்கிறது. ஆனால் பைபிளில் அந்த ஏழு ராஜாக்கள், ஏழு தலைகள் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**அதன் பின்பு,** **வெளி 17: 11.** இருந்ததும் இராததுமாகிய மிருகமே எட்டாவதானவனும், அவ்வேழிலிருந்து தோன்றுகிறவனும், நாசமடையப்போகிறவனுமாயிருக்கிறான்.

அந்த அஞ்ஞான ரோமாபுரியிலிருந்து தோன்றபோகிற எட்டாவது மிருகம்; நான்காம் ராஜ்யம்; தானியேல் கண்ட பொல்லாத மிருகம்; கெடியும் பயங்கரமும் பலத்ததுமான மிருகம்; அதன் நகம் வெண்கலம்; பற்கள் இரும்பு; எவ்வளவு பொல்லாத மிருகம்; அதுதான் எட்டாவது மிருகம். சாத்தான் அவனுக்குள் அவதாரமிடுவான். (The Last Pope who will be Satan incarnate) இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரன் எனப்பட்டவர். ஆனால் அந்த மிருகம் கேட்டின் மகனாய் இருக்கிறான்.

**2தெச 2: 3.** எவ்விதத்தினாலும் ஒருவனும் உங்களை மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் விசுவாச துரோகம் முந்தி நேரிட்டு, கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட்டாலொழிய, அந்த நாள் வராது.

**2தெச 2: 4.** அவன் எதிர்த்துநிற்கிறவனாயும், தேவன் என்னப்படுவதெதுவோ, ஆராதிக்கப்படுவதெதுவோ, அவையெல்லாவற்றிற்கும் மேலாகத் தன்னை உயர்த்துகிறவனாயும், தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து, தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான்.

அவன்தான் அந்திகிறிஸ்து எட்டாவது கொடிய மிருகம் என்று பைபிளில் வாசிக்கிறோம். பின்பு இந்தக்கொடிய மிருகத்திலே பத்து கொம்புகளைப் பற்றி சொல்லப்பட்டிருப்ப தென்னவென்றால்;

**வெளி 17: 12.** நீ கண்ட பத்துக் கொம்புகளும் பத்து ராஜாக்களாம்; இவர்கள் இன்னும் ராஜ்யம் பெறவில்லை; இவர்கள் மிருகத்துடனேகூட ஒருமணி நேரமளவும் ராஜாக்கள்போல அதிகாரம் பெற்றுக்கொள்ளுகிறார்கள்.

**வெளி 17: 13.** இவர்கள் ஒரே யோசனையுள்ளவர்கள்; இவர்கள் தங்கள் வல்லமையையும் அதிகாரத்தையும் மிருகத்திற்குக் கொடுப்பார்கள்.

எப்பொழுது அதிகாரத்தை மிருகத்துக்குக் கொடுப்பார்களென்றால் உபத்திரவக் காலத்தில் ஒப்புக்கொடுப்பார்கள். பின்பு அந்தப்பத்து ராஜாக்களும் அவளைப் பகைத்து, பாழும் நிர்வாணமுமாக்கி, ரஷ்யாவுடன் சேர்ந்து கொண்டு அவளைப் பட்சித்துப்போடுவார்கள். அணுகுண்டை (Atom bomb) வாடிகன் பட்டணத்தின்மேல் போடும்பொழுது ஒரு மணி நேரத்தில் அழிந்து போய்விடும். நடக்கப்போகிற காரியம். இதை வாசிக்கிற நீங்கள் விசுவாசித்தாலும் விசுவாசியாமற்போனாலும் நடக்கப்போகிற காரியம். உண்மையான மணவாட்டி இதை விசுவாசிப்பார்கள். இது நமக்கு எச்சரிப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

பாழாக்கும் அருவருப்பு வரும்பொழுது ஓடிப்போங்கள்; தீத்து வந்து ஜனங்களை அழிப்பான் என்றும், அந்த நாலாம் மிருகம் தேவனுடைய ஆலயத்தில் தேவன் போல் உட்காரும் முன்பாக உபத்திரவக் காலத்துக்குள் போகாதபடிக்குத் தப்பித்துக் கொள்ளுங்கள் என்றும், இயேசுகிறிஸ்து எச்சரித்திருக்கிறார். சிலர் விசுவாசியாமல் போனாலும் என்ன? அவர்களுடைய அவிசுவாசம் தேவனுடைய உண்மையை அவமாக்கமாட்டாது. தேவன் ஒருவரே சத்தியபரர் எந்த மனுஷனும் பொய்யனாய் இருக்கிறான்.

மேலும் அந்தப்பத்து ராஜாக்கள் யாரென்றால் கிரேட் பிரிட்டன், ஜெர்மனி, ஸ்பெயின், பிரான்ஸ், இத்தாலி, ஸ்விட்சர்லாந்து, போர்ச்சுகல். இந்த ஏழு ராஜ்யங்கள். இன்று இருக்கும் இந்த ஏழு ராஜ்யங்களை ஒரு காலத்தில் ரோமாபுரி ஆண்டது. பின்பு ஹெருலியஸ், வேண்டல்ஸ், அஷ்டரகோஸ் என்று மொத்தம் பத்து ராஜ்யங்கள். இவற்றில் ஹெருலியஸ், வேண்டல்ஸ், அஷ்டரகோஸ் என்னும் மூன்று சிறிய ராஜ்யங்களை மூன்று கொம்புகளை அந்தச் சின்ன கொம்பு பிடுங்கிப்போட்டது. இப்பொழுது அந்த ஏழு ராஜ்யங்கள் மட்டும் தான் இருக்கிறது. (Great Britain, Germany, Spain, France, Italy, Switzerland, Portugal).

சகோ. பிரன்ஹாம் பெர்கமு சபை காலம் என்ற செய்தியில், ஏழு சீசர்கள் (Caesars) ஆண்ட ரோமாபுரியானது போப்புவின் ரோமாபுரியாக இப்பொழுது மாறியிருக்கிறது. ஆரம்பத்தில் பாபிலோனில்தான் பிசாசினுடைய சிங்காசனம் இருந்தது. அது எப்படி பெர்கமுக்கு வந்தது என்று கூறுகிறார்.

**வெளி 2: 13.** உன் கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும் நீ என் நாமத்தைப் பற்றிக்கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்.

சகோ. பிரன்ஹாம் ஏழு சபை காலங்கள் புத்தகத்தில் இந்தச் சாத்தானின் சிங்காசனம் பெர்கமுக்கு எப்படி வந்தது என்று சரித்திரத்தின்படிக் கூறுகிறார். அதாவது பாபிலோனை ஆண்ட ராஜா அட்டாலஸ். அவன் என்ன செய்தானென்றால், மேதிய பெர்சிய ராஜ்யம் அவனிடம் மோதும்போது அவன் தன்னுடைய மதசம்பந்தமான புத்தகங்கள் (Sacred Books)

எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ரோம ஆதிக்கத்தில் இருக்கும் பெர்கமுவுக்குச் சென்று தன் சிங்காசனத்தை அங்கே வைத்துவிட்டான். இவ்விதமாய் பாபிலோன் மார்க்கம் அட்டாலஸ் மூலம் பெர்கமுக்கு வந்துவிட்டது. எனவே பெர்கமுவில் அட்டாலஸ் ராஜாங்கத்தையும் பார்ப்பார். மதகுருவாகவும் இருப்பார். இவர்தான் கடவுள் இவரைக் கும்பிடவேண்டும். இது தான் பாபிலோனிய மார்க்கம்.

அட்டாலஸ்க்குப் பின்பு அவன் பிள்ளைகள் வந்தார்கள். மூன்றாம் அட்டாலஸ் வரும்போது அவனுக்குக் குழந்தையில்லை. எனவே அந்த ராஜ்யத்தைப் பாபிலோனுக்கு உயில் எழுதிவைத்துவிட்டான். இதெல்லாம் நடந்த சரித்திரம். உயில் எழுதியதால் ஜூலியஸ் சீசர் அந்த ராஜ்யத்தைப் பெற்றுக் கொண்டான். பெற்றுக்கொண்டது மட்டுமல்லாமல் மதசம்பந்தமான காரியங்களையும் எடுத்துக் கொண்டான். எனவே சீசர்கள் மக்கள் மத்தியில் கடவுளாகவும், ராஜாவாகவும் நினைக்கப்பட்டார்கள். (Priest and King) கடவுளாக வழிபட்டார்கள் இதனால் தான் போப்பை, போப் ஆண்டவர் என்று இன்றும் அழைக்கிறார்கள்.

பின்பு, மாக்சிமஸ் (Maximus) என்ற ராஜா வரும்பொழுது அந்த மதகுரு பட்டத்தை நிராகரித்து; நான் ராஜாவாக மட்டும் இருக்கிறேன் என்று சொல்லும்போது, போப் நான் அந்த மதகுரு பட்டத்தை எடுத்துக்கொள்கிறேன் என்று கூறி மதகுருவாகவும், பின்பு இராஜாவாகவும் மாறிவிட்டார். அதன்பின் வந்த ராஜாக்களுக்குப் **போப்** தான் முடிசூட்ட வேண்டும். (Coronation) இன்று நம்நாட்டில் மத்திய, மாநில அரசாங்கத்தில் பிரதமர், முதல் மந்திரிகளுக்குப் பதவி பிரமாணம் செய்ய வேண்டுமென்றால் ஜனாதிபதி மற்றும் ஆளுநர் தான் செய்து வைக்க வேண்டும்.

அதேபோல் தான் அந்தப்பத்து ராஜ்யங்களிலும் இருந்தது. ரோமாபுரியில் இங்கிலாந்து மன்னன் முடிசூட்டப்பட வேண்டுமென்றால் போப் வந்து முடிசூட்ட வேண்டும். போப்புவுக்கு ஒருவரை ராஜாவாக மாற்றவும் முடியும். அவரை அந்தப் பதவியிலிருந்து நீக்கவும் முடியும். பதவி பிரமாணம் பெற்ற ராஜாக்கள் போப்புவைக் காண வேண்டுமென்றால் வெறும்காலில் பலமணிநேரங்கள் அந்த அரண்மனையில் அடிமைப் போல் காத்திருக்க வேண்டும். அவ்வளவு பலத்த மிருகமாய் மாறிவிட்டது. பத்துக் கொம்புகள்; பத்து ராஜாக்கள் மேல் அது ஆதிக்கம் செலுத்தியது.

சகோ. பிரன்ஹாம் சொல்கிறார். பெர்கமு என்றால் விவாகம் என்று அர்த்தம். மதமும் அரசியலும் விவாகம் செய்தது. மதம் தனியாக இருக்க வேண்டும். அரசியல் தனியாக இருக்கவேண்டும். மூன்றாம் சபையின் காலம் பெர்கமுவில், கத்தோலிக்க மார்க்கமும் அரசியலும் விவாகம் செய்து கொண்டது. அதுபோல் 1இராஜாக்கள் 16-ம் அதிகாரம் 31, 32-ம் வசனங்களை வாசிக்கும்பொழுது ஆகாப் சீதோனியரின் ராஜாவாகிய ஏத்பாகாலின் குமாரத்தியாகிய யேசபேலை விவாகம் செய்யும்போது, மதமும் அரசியலும் இணைந்தது. எப்படியென்றால் அந்த சீதோன் நாட்டிலிருந்த விக்கிரகமாகிய பாகால், அஸ்ரோத்தைக் கொண்டு வந்து அதற்கு ஆகாப் கோவிலைக் கட்டினான். அதேபோல் அரசியலும் மதமும் இணையும்போது பெரிய பெரிய தேவாலயங்களைக் கட்ட ஆரம்பித்தார்கள், கத்தோலிக்க சபைகளைக் கட்ட ஆரம்பித்தார்கள். மாதாவை வழிபடுவது, ஊதுவர்த்தி கொளுத்துவது, ஜெபமாலை எண்ணுவது, துறவிகளாக, கன்னியாஸ்திரிகளாக ஒப்புக்கொடுப்பது எல்லாவிதமான பாபிலோனிய காரியங்கள் அட்டாலஸ் மூலம் பெர்கமுக்கு வந்தது. அரசாங்க செலவிலே பெரிய பெரிய ஆலயங்களைக்கட்டி முழுவதும் அஞ்ஞான மார்க்கமாய் மாறிவிட்டது.

தியத்தீரா சபை காலத்தின் செய்தியில் சகோ. பிரன்ஹாம் என்ன சொல்கிறாரென்றால் ஆகாப் யேசபேலை விவாகம் செய்தபோது அரசாங்க செலவிலே அஸ்தரோத்துக்கும் பாகாலுக்கும் ஆலயத்தைக் கட்டினது போலவே, கான்ஸ்டன்டைன் (Constantine) ரோம சக்கரவர்த்தியாக வரும்போது அக்டோபர் மாதம் 28-ம் தேதி 312 -ம் வருஷம் (28.10.312) அவன் ரோம சின்னமான கழுகை நீக்கிவிட்டு சிலுவைச் சின்னத்தைப் போட்டான். கான்ஸ்டன்டைன் ஒரு அரசியல்வாதி. போப் ஒரு மதவாதி. அரசியலும் மதமும் ஒன்றாய் சேர்ந்தது. அதற்குப் போப் தலைவராக மாறினார். அப்பொழுது பெரிய பெரிய தேவாலயங்கள் கட்டப்பட்டது.

கான்ஸ்டன்டைன் யுத்தத்திற்குப் போகும்போது அவனுக்குச் சிலுவைச் சின்னம் தரிசனம் கிடைத்தது. இதன் மூலம் நீ எல்லாவற்றையும் ஜெயிப்பாய் என்று சொல்லப்பட்டது. (By this sign you will conquer) நடுராத்திரியிலே அவன் எல்லா ராஜ்யங்களையும் கைப்பற்றினான். அதற்குக்காரணம் இந்தச் சிலுவை தான். எனவே தான் தன்னுடைய ஈட்டியில் இருந்த கழுகை எடுத்துப் போட்டுவிட்டு சிலுவையை வைத்தான்.

ரோமாபுரியில் அரசியலும் மதமும் சேர்ந்தது போலவே, நமது நாட்டிலும் அரசியலும் மதமும் கலந்திருக்கிறது. இதனால் கிறிஸ்தவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. ஆயினும் பரிசுத்தாவியானவர் எல்லா வல்லமைகளையும் நிறுத்தி வைத்திருக்கிறார். பரிசுத்தாவி எடுத்துக் கொள்ளப்பட்டபின்பு சாத்தான் கிரியை செய்ய ஆரம்பிப்பான்.

கி.பி. 325-ம் வருஷத்திலே நிசாயா என்ற இடத்தில் கான்ஸ்டன்டைன் ஒரு கூட்டத்தை, அதாவது பெயர் கிறிஸ்தவர்களைக் (Nominal Christians) கூட்டினான். தேவத்துவத்தைக் குறித்து (Godhead) அங்கே கேள்விகள் எழுப்பினது. பிதா குமாரன் பரிசுத்தாவி மூன்று பேரும் தனித்தனியாக இருக்கிறார்கள். பிதா மனுஷனாய் வரமுடியாது. எனவே குமாரனைப் பார்த்து நீர் போய் மனுஷனாய் மாறி ஜனங்களுக்காக மரிக்க வேண்டும். உடனே குமாரன் பிறந்து ஜனங்களுக்காக மரித்து உயிர்த்தெழுந்து நாற்பதாம் நாளில் தம்முடைய இடத்திற்கு வந்துவிடுவார். இப்பொழுது மூன்றாம் நபரை; பரிசுத்தாவியைப் பார்த்து, நீர் போய் ஜனங்களை ஆயத்தப்படுத்தவேண்டும் என்று அவர்கள் கலந்துரையாடினர் என்று பிதா குமாரன் பரிசுத்தாவி என்ற திரித்துவ பிரமாணத்தை நிசாயா என்ற இடத்தில் ஏற்படுத்தினார்கள்.

வேதாகமத்தின்படி திரித்துவம் என்ற சொல்லே இல்லை. தேவத்துவத்தைப் பற்றிதான் உள்ளது. திரித்துவம் நிசாயாவில் ஏற்படுத்தப்பட்டது. இந்தத் திரித்துவத்தை உண்மையான விசுவாசிகள் விசுவாசிக்க மாட்டார்கள். அவர்கள் ஒரே தேவனைத் தான் விசுவாசிப்பார்கள். "இஸ்ரவேலே கேள்; உன் தேவனாகிய கர்த்தர் ஒருவரே கர்த்தர்". பாபிலோனியர்கள் மார்ஸ், வீனஸ், ஜுபிட்டர் போன்றவற்றை வழிபடுகிறார்கள், இந்த பாபிலோனிய மார்க்கம் தான், ரோம மார்க்கம். இந்த ரோம மார்க்கம் தான், ரோமன் கத்தோலிக்க மார்க்கம். அதுதான் இன்று இருக்கிற திரித்துவம்.

இந்தத் திரித்துவக் கொள்கையை நிசாயாவில் காஸ்ன்டன்டைன் மூலம் ஏற்படுத்தும் போது, இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது: இயேசு ஒருவரே சிருஷ்டிகர்த்தர். (Jesus is Creator) என்று ஹெருலியஸ், அஷ்டரகோஸ், வேண்டல்ஸ் என்ற மூன்று ராஜாக்கள், (மூன்று கொம்புகள்) சொன்ன போது நீங்கள் எங்கள் கொள்கையை (Trinity) விசுவாசிக்க வில்லையென்றால் உங்களை வேரோடு பிடுங்கிவிடுவோம், முழுவதுமாக அழித்துவிடுவோம் என்று கூறி அந்த சின்ன கொம்பாகிய நாலாவது மிருகம் அவர்களை அழித்துப்போட்டது. இந்த மூன்று ராஜ்யங்களிலும் ஒருவரையும் மீதியில்லாமல் அழித்தது. அந்த சின்ன கொம்பு போப். (Papal Rome).

கம்போடியா மன்னன் எத்தனையோ லட்சம்பேரைக் கொன்று போட்டான். சமீபத்தில் நடந்தது. இது பற்றி ஒருவருக்கும் தெரியாது. மீடியா (Media) இதை மறைத்துவிடும். திரித்துவ பிரமாணத்தை விசுவாசியாதவர்களைக் கொலை செய்தார்கள். இன்று எல்லா ஸ்தாபனமும் திரித்துவம் தான். ஆனால் நாம் ஒரே தேவனை விசுவாசிக்கிறோம்.

கி.பி. 312-லிருந்து திரித்துவ பிரமாணம் வந்தது இதிலிருந்து பிதா குமாரன் பரிசுத்தாவி நாமத்தினால் தான் ஞானஸ்நானம் இன்றுவரை எல்லா ஸ்தாபனங்களிலும் கொடுக்கப்பட்டு வருகிறது. நாம் பைபிளில் பார்க்கும்போது எந்த இடத்திலும் பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுக்கப்படவேயில்லை. அப்படி பைபிளில் இல்லாத ஞானஸ்நானம் கொடுக்கப்பட்டதேயானால் அதற்குப்பின்னால் அசுத்தாவி (Evil Spirit) இருக்கிறது.

எந்தப்போதகர்களாவது அப்படி கொடுத்தால் அவர்கள் பின்னால் நாலாம் மிருகத்தின் ஆவி இருக்கிறது. யாரெல்லாம் பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றார்களோ அவர்கள் மறுபடியும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெறவேண்டும். நாம் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் கொடுக்கும்போது அதற்குப்பின்னால் பரிசுத்தாவியானவர் இருக்கிறார். நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள்; அப்பொழுது பரிசுத்தாவியின் வரத்தைப் பெறுவீர்கள். இது கொள்கை இல்லை; தேவனுடைய வார்த்தை.

திரித்துவம் என்பது மனுஷனால் ஏற்படுத்தப்பட்ட கொள்கை. (Doctrine) திரித்துவம் என்ற வார்த்தை பைபிளில் இல்லை. எனவே, மூன்று பேர் இருக்கிறார்கள். ஒருவர் ஒருவரை அனுப்பினார். இவர் இன்னொருவரை அனுப்பினார் என்றும், பிதா மிக வயதானவராய்; தாடியும் தலையும் வெண்மையாய் இருக்கிறது.இயேசு கிறிஸ்து இளமையாய் இருக்கிறார் என்றும்; நீர் போய் ஜனங்களுக்காக மரிக்க வேண்டும் என்றும்; பின்பு பரிசுத்தாவியானவர் ஒரு தேற்றரவாளன் போல் இருக்கிறார் என்றும் சித்தரித்திருக்கிறார்கள்.

நாம் அப்படி விசுவாசிக்கவில்லை, தேவன் ஒருவரே; தேவன் ஆவியாக இருக்கிறார். தேவன் ஒருவரே; ஆனால் மூன்று தன்மைகளில் வெளிப்படுகிறார். (Only one God, but three different manifestation) அவர் தேவதூதனானவராய் ஆபிரகாமுக்குத் தரிசனமாகி ஆபிரகாமே பிள்ளையாண்டான் மேல் கையைப் போடாதே; என்று ஆவிக்குரிய சரீரத்தில் (Theophany body) வந்து சொன்னார். பின்பு தேவன் மரியாளின் கர்ப்பத்தில் தனக்கென்று ஒரு சரீரத்தை உண்டாக்கி மாம்சத்தில் வெளிப்பட்டார். சிலுவையில் அறையப்பட்டு நமக்காக மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து நாற்பதாம் நாளில் எடுத்துக்கொள்ளப்பட்டு பின்பு, அவரே பரிசுத்தாவியாய் நமக்குள் இருக்கிறார்.

இன்று உலகில் உள்ள அனைத்து ஸ்தாபனமும் அந்தச் சின்ன கொம்பின் உபதேசத்தில்தான் உள்ளது. பெந்தேகோஸ்தே ஸ்தாபனத்துக்குப் பின் இந்த சின்ன கொம்பின் ஆவி இருக்கிறது. திரித்துவம் ஒரு பிசாசின் உபதேசம், பாதாளத்திலிருந்து வந்த பொய் உபதேசம். அந்த மூன்று கொம்புகளும் கத்தோலிக்க மார்க்கத்தின் உபதேசங்களை எதிர்த்து நின்றதினால் அந்த மிருகம் (Pope) அந்த மூன்று கொம்புகளையும் பிடிங்கிப் போட்டது. அந்தச் சின்ன கொம்பு அதிகாரத்தைப் பெற்றபின் அந்த இனத்தையே முற்றிலும் அழித்துப்போட்டது.

இன்று எல்லா வல்லமைகளும் சிலுவைக்குப் பின்னால் வந்திருக்கிறது. (Political, Religious, Demonic Power get behind the Cross) மதவல்லமை, அரசியல்வல்லமை, பிசாசின்வல்லமை சேர்ந்து, சிலுவைக்குப் பின்னால் மறைந்திருக்கிறது. ஆனால் அவர்களோ நாங்கள் கர்த்தருடைய பிள்ளைகள் என்று, கர்த்தருடைய வார்த்தையையும் போதிக்கிறார்கள். இது என்னவென்று தானியேல் ஆச்சரியமாய் பார்க்கிறான். இந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும், சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள். மேலும், இரகசியம், மகாபாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது.

அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும், இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறாளே. இது என்ன ஆச்சரியம்! தங்களைக் கிறிஸ்தவர்கள் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர்கள் செய்கிறது என்னவென்றால் விக்கிரகத்தை வழிபடுதல், ஊதுபர்த்தி கொளுத்துதல், ஜெபமாலை எண்ணுதல், பரிசுத்தவான்களைக் கொலை செய்வது இவைகளைப் புரிந்து கொள்ளமுடியவில்லை.

இப்பொழுது உலகம் எப்படி இருக்கிறது என்றால், எது தவறோ அதைச் சரி என்றும், எது சரியோ அதைத் தவறு என்றும் சொல்லும் காலம். கான்ஸ்டன்டைன் திரித்துவ உபதேசத்தைக் கொண்டு வந்து ஒரு கடவுளுக்குப் பதிலாக மூன்று கடவுள்களும், இயேசு கிறிஸ்துவின் நாமத்துக்குப் பதிலாக பிதா குமாரன் பரிசுத்தாவி நாமத்தில் ஞானஸ்நானம் (Title Baptism) கொடுத்து, விக்கிரகங்களை ஸ்தாபிப்பது, நாங்களும் கடவுளுடைய பிள்ளைகள் என்று சொல்லும் பொழுது இந்தச் சின்ன கொம்பு பொல்லாத கொம்பாக இருக்கிறது. அது மூன்று இனத்தை அழித்துவிட்டது.

<u>வெளி 13: 1.</u> **பின்பு நான் கடற்கரை மணலின்மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பிவரக் கண்டேன்; அதற்கு ஏழு தலைகளும் பத்துக்கொம்புகளும் இருந்தன; அதின் கொம்புகளின்மேல் பத்து முடிகளும், அதின் தலைகளின்மேல் தூஷணமான நாமமும் இருந்தன.**

இதுவரை ஏழுதலைகள்; ஏழு ராஜாக்கள் என்றும், பத்து கொம்புகள்; பத்து ராஜ்யங்கள் என்றும் அறிந்தோம். இதன்பின்பு அந்தத்தலைகளின் மேல் ஒரு தூஷணமான நாமம் இருந்தது. அந்த தூஷணமான நாமம்தான், தேவனுடைய குமாரனுக்குப் பதிலாக ஆட்சி செய்கிறவர். (VICARIUS FILII DEI) என்று இலத்தின் மொழியில் எழுதப்பட்டிருந்தது.

| | | |
|---|---|---|
| V | : | 5 |
| I | : | 1 |
| C | : | 100 |
| A | : | 0 |
| R | : | 0 |
| I | : | 1 |
| U | : | 5 |
| S | : | 0 |
| F | : | 0 |
| I | : | 1 |
| L | : | 50 |
| I | : | 1 |
| I | : | 1 |
| D | : | 500 |
| E | : | 0 |
| I | : | 1 |
| | | 666 |



இவ்விதமாகக் கணக்கிட்டுப் பார்த்தால் 666. VICARIUS FELII DEI என்னும் தூஷணமான நாமம் போப்புவின் கிரீடத்தில் இன்றைக்கும் எழுதப்பட்டுள்ளது. அந்தக் கிரீடம் மூன்றடுக்குகளாக உள்ளது. இது எதைக் குறிக்கிறதென்றால் பாதாளத்துக்கும், பூலோகத்துக்கும், பரலோகத்துக்கும் அவர்தான் அதிகாரி என்பதைக் குறிக்கிறது.

அந்த மிருகம் சமுத்திரத்திலிருந்து வந்த அஞ்ஞான ரோமாபுரி. பின்பு அது காயப்பட்டது என்றால், அந்த அஞ்ஞான ரோமாபுரி அழிந்தது. அந்த மிருகத்தை ஆராதனை செய்யவேண்டும். அந்த மிருகம் கொலை செய்யும்படியான அதிகாரத்தைப் பெற்றிருக்கிறது.

வெளிப்படுத்தல் 13: 3-11 வரை, 15-18 வரை.

3. அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய்க் காயப்பட்டிருக்கக் கண்டேன்; ஆனாலும் சாவுக்கேதுவான அந்தக் காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தைப் பின்பற்றி,

4. அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங்கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள். அல்லாமலும்: மிருகத்திற்கு ஒப்பானவன் யார்? அதினோடே யுத்தம்பண்ணத்தக்கவன் யார்? என்று சொல்லி, மிருகத்தையும் வணங்கினார்கள்.

5. பெருமையானவைகளையும் தூஷணங்களையும் பேசும் வாய் அதற்குக் கொடுக்கப்பட்டது; அல்லாமலும், நாற்பத்திரண்டு மாதம் யுத்தம்பண்ண அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது.

6. அது தேவனைத் தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து, அவருடைய நாமத்தையும், அவருடைய வாசஸ்தலத்தையம், பரலோகத்தில் வாசமாயிருக் கிறவர்களையும் தூஷித்தது.

7. மேலும், பரிசுத்தவான்களோடே யுத்தம்பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டதுமல்லாமல், ஒவ்வொரு கோத்திரத்தின்மேலும் பாஷைக்காரர்மேலும் ஜாதிகள்மேலும் அதற்கு அதிகாரங்கொடுக்கப்பட்டது.

8. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.

9. காதுள்ளவனெவனோ அவன் கேட்கக்கடவன்.

10.சிறைப்படுத்திக்கொண்டு போகிறவன் சிறைப்பட்டுப்போவான்; பட்டயத்தினாலே கொல்லுகிறவன் பட்டயத்தினாலே கொல்லப்படவேண்டும். பரிசுத்தவான்களுடைய பொறுமையும் விசுவாசமும் இதிலே விளங்கும்.

11. பின்பு, வேறொரு மிருகம் பூமியிலிருந்து எழும்பக் கண்டேன்; அது ஆட்டுக்குட்டிக்கு ஒப்பாக இரண்டு கொம்புகளையுடையதாயிருந்து, வலுசர்ப்பத்தைப் போலப் பேசினது.

15. மேலும் அம்மிருகத்தின் சொரூபம் பேசத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலைசெய்யத்தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியைக் கொடுக்கும்படி அதற்குச் சத்துவங்கொடுக்கப்பட்டது.

16. அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்,

17. அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது.

18. இதிலே ஞானம் விளங்கும்; அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தியுடையவன் கணக்குப்பார்க்கக்கடவன்; அது மனுஷருடைய இலக்கமாயிருக்கிறது; அதினுடைய இலக்கம் அறுநூற்றறுபத்தாறு (666).

எனவே, அந்தமிருகம் பெருமையானவைகளைப் பேசி தூஷிக்கிறது, 6 கோடியே 80 லட்சம் பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்களைக் கொலை செய்தது. கி.பி. 324-லிருந்து 1508-ம் வருஷம் வரைக்கும் 6 கோடியே 80 லட்சம் பேரைக் கொலை செய்தது, என்று சரித்திரம் கூறுகிறது. ஜனங்களுடைய கால்கள், கைகளைத் தனியாக எடுத்தும் சித்திரவதைச் செய்தும் கொன்றது. குழந்தைகளையும் கொலை செய்தது.

ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தை ஏற்றுக்கொள்ளாத அனைவரும் கொலை செய்யப்பட்டார்கள் என சரித்திரம் சொல்லுகிறது. இணைய தளத்திலும் (Internet) இது பற்றி இருக்கிறது. ஒரு பிராட்டஸ்டன்ட் கிறிஸ்தவர்கள் கூட இதை எதிர்த்துக் கேள்வி கேட்டதில்லை. இன்றைக்கும் போப்புவை எதிர்த்துக் கேட்க யாரும் இல்லை. அந்த மிருகத்துக்கு ஒப்பானவன் யார்? மிருகத்தோடு எதிர்த்து நிற்பவன் யார்? என்று சொல்லி மிருகத்தை வணங்கினார்கள். பிராட்டஸ்டன்ட் ஜனங்களும் இப்பொழுது அங்கு போகிறார்கள்.

அமெரிக்கா இரண்டு கொம்புகள் உள்ள மிருகம். ஒன்று ஜனநாயகம். மற்றொன்று குடியரசு. (Democratic and Republic) என இரண்டு கட்சிகள் மட்டுமே உள்ள நாடு. இந்த அமெரிக்கா மிருகத்துக்கு ஒரு சொருபத்தைச் செய்து, உலக சபைகளின் ஐக்கிய மாநாடு (World Council of Churches) ஏற்படுத்தி அந்த மிருகத்துக்கு அதிகாரத்தைக் கொடுக்கும்.

முதலில் இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனாய் வந்தார். இயேசு கிறிஸ்துவுக்குப் பின்பு கத்தோலிக்க மார்க்கம் பேதுருதான் முதல் போப். ஏனென்றால் பரலோக ராஜ்யத்தின் திறவுகோல் பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டது என்று கூறினர். நாங்கள் தான் பேதுருவின் வம்சாவழியாய் இருக்கிறோம்; அதனால் எங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. பரலோக ராஜ்யத்தின் திறவுகோல் எங்களுக்குக் கொடுக்கப்பட்டது. நாங்கள் தான் எல்லாவற்றுக்கும் மேல் என்று போப் சொல்லும்பொழுது, மூன்றரை வருஷம் (3½ Yrs) உபத்திரவக்காலத்திலே அவன் தேவனுடைய ஆலயத்திலே தேவன் போல் உட்கார்ந்து; அவன் எல்லாவற்றையும் ஆளுகை செய்வான்.

அவனுக்குப் பொருளாதாரவல்லமை, மதவல்லமை, அரசியல்வல்லமை கொடுக்கும்போது எல்லா நாடுகளும் இந்தியா உட்பட அங்குபோய் சேரும். எனவே ரோம ஆவி (R.C. Spirit) எல்லாவற்றையும் மேற்கொள்ளும். அவன் தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல் உட்கார்ந்து உலகத்தையே ஆளுகை செய்யும்போது கொடியகாலம் ஏற்படும்.

அருமையானவர்களே! இதைத் தடை செய்கிறது ஒன்று இருக்கிறது. தடை செய்கிறவன் நீக்கப்பட்டாலொழிய அந்த நாள் வராது; அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியை செய்கிறது.

2 தெச 2: 7. அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது; ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.

தடை செய்கிறவன் யார்? பரிசுத்தாவி. (Holy Spirit) பரிசுத்தாவி எங்கு இருக்கிறது? மணவாட்டிக்குள் இருக்கிறது. பரிசுத்தாவி எடுத்துக்கொள்ளப்படும்போது நாமும் எடுத்துக் கொள்ளப்படுவோம்.

அந்திகிறிஸ்து உலகத்தை ஆளுகை செய்ய விடாதபடி பரிசுத்தாவியானவர் தடை செய்கிறார். மணவாட்டி நீக்கப்படும்போது அக்கிரமக்காரன் வெளிப்படுவான்.

2 தெச 2: 8. நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான்; அவனைக் **கர்த்தர்** தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.

அந்தி கிறிஸ்து வரும்போது மிகுந்த உபத்திரவக் காலம் வரும். கர்த்தர் தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே அவனை நாசம் பண்ணுவார். (The Lord Shall consume him with the Spirit of His mouth and destroy him with the Brightness of His coming) வேறு எதுவும் எதிர்க்க முடியாது. நாம் கர்த்தரைச் சேர்ந்தவர்களாய் இருக்கிறோம். தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஆவி நமக்குள் இருக்கிறது. ஏழாம் முத்திரையானது கர்த்தருடைய வருகையாய் இருக்கிறது. நாம் இதிலே ஒரு பாகமாய் இருக்கிறோம்.

எல்லா ஸ்தாபனங்களும் கத்தோலிக்க கொள்கையுடன் அடிபணிந்து தான் கிடக்கிறது. ஆனால் அவருடைய மணவாட்டிக்கு அவர் வருகையின் பிரசன்னம் இருக்கும். எனவே மணவாட்டி மட்டுமே அதை எதிர்த்து நிற்க முடியும். (We are Overcomers) மற்றவைகள் எதுவும் எதிர்த்து நிற்க முடியாது. நான் ஜெயங்கொண்டு என் பிதாவின் சிங்காசனத்தில் உட்கார்ந்தது போல ஜெயங்கொள்ளுகிறவன் எவனும் என்னுடைய சிங்காசனத்திலே என்னோடு கூட உட்காரும்படி அவனுக்கு அருளிச்செய்வேன்.

உபத்திரவக்காலம் வரும்போது புத்தியில்லாத கன்னிகைகளும், 1,44,000 யூதர்களும் (Jews) மிருகத்தை மேற்கொள்ளும் வல்லமை இல்லாததினால் சாத்தான் அவர்களைக் கொன்று போடுவான். ஆனால் தேவன் தம்முடைய மணவாட்டியாகிய நமக்குப் பரிசுத்தாவியின் பெலத்தையும், வல்லமையும் கொடுத்து மேலே எடுத்துக்கொள்வார்.

பரிசுத்தாவியில்லாத புத்தியில்லாத கன்னிகைகளை; அந்த மூன்று கொம்புகளை எப்படி பிடுங்கியதோ அதே போல் பிடுங்கிப் போடும். இவர்கள் இரத்த சாட்சியாக மரிப்பார்கள். கடைசி நேரத்தில், போப்புவின் ரோமாபுரியானது உலகத்தை ஆளுகை செய்ய வேண்டிய காலத்தில் நாம் இருக்கிறோம். ஆட்டுக்குட்டியின் ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்படாத அனைவரும் அதை வணங்குவார்கள்.

வெளி 13:8. உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.

போப்புவை வணங்காதவர்கள் கொல்லப்படுவார்கள். இதனைச் சரித்திரத்தின் மூலம் பார்த்தோம். போப்புவின் காரியங்களுக்குக் கீழ்ப்படியாத ஆறு கோடியே எண்பது இலட்சம் பிராட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்கள் கொல்லப்பட்டார்கள் என்று (Foxe's book of Martyrs) இரத்த சாட்சிகள் என்னும் புத்தகத்தில் குறிக்கப்பட்டுள்து. போப் இன்னோசன்ட் - III (Pope Innocent – III) காலத்தில் ஆயிரக்கணக்கான பிராட்டஸ்டென்ட் கிறிஸ்தவர்கள் ஈவு இரக்கம் இல்லாமல் கொல்லப்பட்டார்கள்.

போப் லியோ - X (Pope Leo - X) காலத்தில் பாவமன்னிப்பு சீட்டை விற்றார்கள். ஒருவன் பாவம் செய்ததற்குச் சீட்டு வாங்கிவிட்டால் அவன் பாவம் மன்னிக்கப்படும். ஏனென்றால் போப்புவுக்குத்தான் மன்னிப்பதற்கு அதிகாரம் உண்டு. செய்யப்போகும் பாவத்திற்கும் சீட்டு வாங்கி விடலாம். ஒருவனைக் கொலை செய்ய வேண்டுமென்றால் முன்கூட்டியே சீட்டு வாங்கிவிடலாம். கொலை செய்தால் தவறு கிடையாது, வேசித்தனம் செய்தால் தவறு கிடையாது; அதுதான் பாவமன்னிப்பு சீட்டு.

இந்த பாவமன்னிப்பு சீட்டுக்கு விரோதமாக மார்டின் லுத்தர் அக்டோபர் மாதம் 31ஆம் தேதி 1517-ம் வருஷத்தில் பிரச்சாரம் பண்ணினார். கிறிஸ்தவ மார்க்கத்துக்கு விரோதமான கத்தோலிக்க மார்க்கத்தின் 95 காரியங்களைக் காஸ்ட்டில் சபையில் (Castle Church) ஆணி அடித்து மாட்டி புரட்சியை ஏற்படுத்தினார். அப்படி உருவான சபைதான் பிராட்டஸ்டன்ட் சபை (Protestant Church) இதெல்லாம் நடந்த காரியம்.

வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய் கொடியேற்றுவார் என்று ஏசாயா 59:19-ல் வாசிக்கிறோம். (When the enemy shall come in like a flood, the Spirit of the Lord shall lift up a standard against him) கர்த்தருடைய ஆவியானவர் அவனை மேற்கொள்வதற்கு நமக்கு வெளிப்பாட்டைக் கொடுத்திருக்கிறார்.

மீகா 5: 5. இவரே சமாதான காரணர்; அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும்போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்.

அசீரியன் நம்மை மேற்கொள்ள வருவான், அந்த அசீரியன் ஒரு சாத்தானின் ஆவியாய் இருக்கிறான். அசீரிய ராஜாவின் பின்னாலிருக்கும் பிசாசின் ஆவி பாபிலோன். ரோமாபுரிக்குப் பின்னாலிருக்கும் பிசாசின் ஆவி. இந்த அசீரியன் தேசத்திலே வரும்போது நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போது ஏழு மேய்ப்பர்களையும், மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (Seven Shepherds and Eight Principal Men) இந்த ஒரு சக்திதான் அந்த அசீரியனை, அந்த நாலாம் மிருகத்தை நிறுத்த முடியும், பாதாளத்தின் வாசல்களை மேற்கொள்ள முடியும்.

இந்த ஏழு மேய்ப்பர்கள் யாரென்றால் பவுல், இரினியஸ், மார்டின், கொலம்பா, லுத்தர், வெஸ்லி, பிரன்ஹாம் என்பவர்கள்.






**வெளி. 1 : 16.** தமது வலதுகரத்திலே ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருந்தார்; அவர் வாயிலிருந்து இருபுறமும் கருக்குள்ள பட்டயம் புறப்பட்டது; அவருடைய முகம் வல்லமையாய்ப் பிரகாசிக்கிற சூரியனைப் போலிருந்தது.




மந்தையைப் போஷிக்கத்தக்க மேய்ப்பர்களைக் கர்த்தர் அந்தந்த காலத்திலே கொடுத்தார். நாம் இன்றைக்கு இந்த ஏழு மேய்ப்பர்களின் கீழ் போஷிக்கப்படுகிறோம்.

- ஒரு காலத்திலே லுத்தர் செய்தி அந்த காலத்துப் பரிசுத்தவான்களைப் போஷித்தது.
- அடுத்து, வெஸ்லி செய்தி அவருடைய காலத்திலிருந்த பரிசுத்தவான்களைப் போஷித்தது.
- இப்பொழுது, சகோ. பிரன்ஹாம் செய்தி முழுமையான வார்த்தையாய் இக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களைப் போஷித்துக் கொண்டிருக்கிறது. இந்த வெளிப்பாடுதான் அந்த அசீரியனை எதிர்க்கும். இந்தக்கல்லின் மேல் என் சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

**மத். 16: 18.** மேலும் நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ பேதுருவாயிருக்கிறாய், இந்தக்கல்லின் மேல் என் சபையைக்கட்டுவேன்; பாதாளத்தின் வாசல்கள் அதை மேற்கொள்வதில்லை.

அந்தக்கல் எதுவென்றால், இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடு (It's a Revelation of JESUS CHRIST) ஏழு முத்திரைகள், ஏழு சபைகள் எல்லாமே இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்பாடுதான்.

**இந்த எட்டு அதிபதிகள் யாரென்றால், (Eight Principal Men) புதிய ஏற்பாட்டைக் கவனிக்கும்போது எட்டுப்பேர் எழுதியிருக்கிறார்கள். மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், பவுல், யாக்கோபு, பேதுரு, யூதா இவர்களால் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டைப் பார்ப்போம்.**

| | | |
|---|---|---|
|  |  |  |
| மத்தேயு | மாற்கு | லூக்கா |
|  |   |  |
| யோவான் | பவுல் | யாக்கோபு |
|  |  | |
| பேதுரு | யூதா | |

1. மத்தேயுவால் - மத்தேயு எழுதின சுவிசேஷம்.
2. மாற்குவால் - மாற்கு எழுதின சுவிசேஷம்
3. லூக்காவால் - லூக்கா மற்றும் அப்போஸ்தல நடபடிகள் எழுதப்பட்டது.
4. யோவானால் (John the Beloved) யோவான் எழுதின சுவிசேஷம், யோவானுடைய மூன்று நிருபங்கள் மற்றும் வெளிப்படுத்தின விசேஷம்.
5. பவுலால் - ரோமருக்கு எழுதின நிருபம், I – கொரிந்தியர், II – கொரிந்தியர், கலாத்தியர், எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர், I-தெசலோனிக்கேயர்,

   II- தெசலோனிக்கேயர், I-தீமோத்தேயு, II-தீமோத்தேயு, தீத்து, பிலமோன், எபிரெயர், போன்றவை எழுதப்பட்டுள்ளது.
6. யாக்கோபுவால் - யாக்கோபு எழுதின பொதுவான நிருபம்.
7. பேதுருவால் I – பேதுரு, II – பேதுரு.
8. யூதாவால் - யூதா எழுதின பொதுவான நிருபம்.

இவ்வாறு இருபத்தேழு புத்தகங்களை இந்த எட்டு அதிபதிகள் எழுதியிருக்கிறார்கள்.

எனவே, ஏழு சபைக்காலத் தூதர்களும் இந்த எட்டு அதிபதிகளும் இருந்தால், அந்த அசீரியன் வரும்போது நாம் ஜெயிக்கமுடியும். இவர்கள் மூலம் சொல்லப்பட்டுள்ள செய்திகளைப் படிக்க எவ்வளவு நேரமிருந்தாலும் போதாது. அவ்வளவு செய்திகள் உள்ளது.

நெப்போலியன் போனபாட் ஜுலை மாதம் 5-ஆம் தேதி 1808 -ஆம் வருஷம் (05-07-1808) ஏழாம் போப்பியர்ஸ் -ஐ (Popeyes-7$^{th}$) மதத்தை மட்டும் பார்த்துக்கொள். எங்கள் மேல் அதிகாரம் செலுத்தக்கூடாது என்று ஜெயிலில் அடைத்து விட்டான். அது முதல் போப் ராஜாக்கள் மேல் அதிகாரம் செய்வதை விட்டுவிட்டு வார்டிகன் பட்டணத்தில் மதத்தை மட்டும் பார்த்துக்கொண்டிருக்கிறார்.

இன்னும் கொஞ்ச காலம் கழித்து போப்புவிற்கு மறுபடியும் இந்த வல்லமை வரும். தடை செய்கிறவன் நீக்கப்படும்போது, மணவாட்டி எடுத்துக் கொண்டபின், அந்த நாலாம் மிருகம் அரசியல் வல்லமை பெற்றுக்கொள்ளும்.

புத்தியில்லாத கன்னிகைகள்; பரிசுத்தாவி பெறாதவர்கள் இந்த நேரத்திற்குரிய செய்தியிலே வந்தும் இயேசுவை நேசிக்காதவர்கள்; உலகத்துக்கு ஒத்த வேஷமாக மாறிக்கொண்டிருக்கிறவர்கள்; உலகம், உலகம், பணம், பணம் என்று போகிறவர்கள்; கர்த்தருக்கு முதன்மை ஸ்தானம் கொடுக்காதவர்கள், எல்லோரும் நிச்சயமாகக் கைவிடப்பட்டு அந்த மிருகத்தின் பிடியிலே சிக்கிக் கொள்வார்கள். அப்பொழுது அர்மகெதோன் யுத்தம் (Atomic fire) வந்து எல்லோரையும் அழித்து விடும்.

கர்த்தர் அவனைத் தமது நாசியின் சுவாசத்தினாலும், வருகையின் பிரசன்னத்தினாலும் நாசம் பண்ணுவார். கம்யூனிசம் அவனை நாசம் பண்ணும். சகோ. பிரன்ஹாம் சொல்கிறார் ரோம் உலகத்தை ஆளுகைச் செய்யும். ரஷ்யா ரோமாபுரியை அழித்துப்போடும். பின்பு எல்லா நாடுகளும் ஒருவருக்கு விரோதமாக ஒருவர் பட்டன் (Button) அழுத்தும்போது உலகமே அழிந்துபோகும். இதிலிருந்து தப்பித்துக்கொள்ள நமக்கு இந்த ஏழு மேய்ப்பர்கள், எட்டு அதிபதிகளின் செய்திகள் தான்; நம்மைப்பாதுகாப்பான இடத்திற்குக் கொண்டு செல்லும். இதைப்படிக்கப் படிக்க எவ்வளவு இனிமையாய் இருக்கிறது. கர்த்தர் இந்த உலகத்தில் நாம் அனுபவிக்க எல்லாவற்றையும் கொடுத்திருக்கிறார். ஆனாலும் ஒருநாள் கூட இந்த உலகத்தில் இருக்க மனதில்லை. அவர் எப்பொழுது வருவார்; அவரைச் சந்திக்க வேண்டும்; அந்த நாள் நல்ல நாள், பாக்கிய நாள், இதற்காக நாம் காத்துக்கொண்டிருக்கிறோம்.

இயேசுவை நாம் நேசித்து, அவர் வார்த்தைக்கு நம்மை ஒப்புக்கொடுத்து, அந்த வார்த்தையை நேசித்தால் எவ்வளவு ஆசீர்வாதம்; இங்கேயும் ஆசீர்வாதம்; அங்கேயும் ஆசீர்வாதம். அந்த அந்திக் கிறிஸ்துவையும் ஜெயிக்க முடியும். இதற்கு மாறாக இருப்பவர்கள் அந்த அந்திக்கிறிஸ்துவுக்கு அடிமைகளாவார்கள். அந்த மிருகத்தின் முத்திரையையும் தரித்துக்கொள்வார்கள். நமக்கோ இந்த உலகத்தில் அனுபவிக்க அனைத்தும் கொடுத்திருந்தாலும் நமக்கு அதில் திருப்தியில்லை. நாம் அவருக்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம் (“We are longing for the day of the coming of our LORD JESUS CHRIST”).

**“ஆமென்”**